1986 நவம்பர் 14]

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையில் ஒரு ஆண்டுக்குத் தேவையான மெயின்டெனன்ஸ் செலவை விடக் கூடுதலாக $1\frac{1}{2}$ பங்கு, 2 பங்கு செலவு செய்து திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்று விடுவதாக சொல்கிறார்கள். எனவே, தொடர்ந்து 2 பங்கு 3 பங்கு ஒரு ஆண்டுக்கு உரிய மெயின்டனன்ஸ் காஸ்ட்டை விட கூடுதலாக செலவு செய்து விடுகிற காரணத்தால் 2 ஆண்டு காலத்திற்கு வருகின்ற அந்த மெயின்டனன்ஸ் செலவு ஒரு ஆண்டிலேயே வேலை செய்து விடுவதாக சொல்லி தொடர்ந்து அந்தப் பணத்தை எடுத்து விடுகிற முறை பொதுப்பணித் துறையில் இருப்பதாகவும், அதன் காரணமாக 2, 3 ஆண்டுகளுக்கு மெயின்டெனன்ஸ் வேலை செய்ய முடியாத அளவுக்கு ஒரு ஆண்டிலேயே வேலையை முடித்து விடுவதாக எஸ்ட்டிமேட் ஒப்புதல் பெற்று பணத்தை எடுக்கிற காரணத்தால் இது போன்ற சங்கடங்கள் பொதுப்பணித் துறையில் இருப்பதாக நான் அறிகிறேன். எனவே அப்படிப்பட்ட நிலை நீடிக்கப்படும் என்று சொன்னால் 3 ஆண்டுக் காலம் பொதுப்பணித் துறை பாதுகாப்பு அற்ற நிலை ஆகிவிடும். எனவே, அரசு மறு பரிசீலனை செய்து அந்த அந்த ஆண்டுக்கு உரிய மெயின்டெனன்ஸ் செலவைத் தான்செய்ய வேண்டும் என்ற உத்திரவை அரசு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது போல் செயல்பட முடியவில்லை. காரணம் அவசியம் என்று வருகிற நேரத்தில் மெயின்டெனன்ஸ் நாம் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்குக் கூடுதலாக அரசு நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமா என்று மட்டும் ஆய்ந்து பார்க்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. முன்னாள் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்குப் பிறந்தநாள் புகழ் அஞ்சலி

***திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, தேசப் பிதா காந்தி அடிகளால் தன்னுடைய அரசியல் வாரிசு என்று அறிவிக்கப்பட்டவரும், உலகப்புகழ் மிக்க வரலாற்று நூல் ஆசிரியராகவும், நாட்டின் சுதந்திரத்திற்காக பன்னெடுங்காலம் சிறை இருந்த செம்மலாகவும், இந்திய திருநாட்டின் முதல் பிரதமராகவும், ஐந்தாண்டு திட்டங்களின்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 நவம்பர் 14

மூலவர் ஆகவும், பஞ்சசீலக் கொள்கையை உருவாக்கியவராக வும் ஜனநாயக சோசியலிசத்தின் சிற்பியாகவும், நடுநிலைக் கொள்கையின் நாயகர் ஆகவும், நாட்டு மக்களால் ரோஜாவின் ராஜா என அன்போடு அழைக்கப்பட்டவரும் ஆகிய ஆசிய ஜோதி பண்டித ஜவஹர்லால் நேருவினுடைய 97-வது பிறந்த தினம் ஆகிய இன்றைய தினம் குழந்தைகள் தினமாகவும், தேசிய ஒருமைப்பாடு அணிவகுப்பு தினமாகவும் கொண்டாடப்படுகின்ற இந்த நேரத்தில் ஆசிய ஜோதியை நினைவு கூர்கின்ற விதத்தில் இந்த மன்றமும் புகழ் அஞ்சலி செலுத்துவது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள் கிறேன்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவம்பர் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க மக்கள் மாணிக்கம் என்றும், என்னுடைய அரசியல் வாரிசு என்றும் அண்ணல் காந்தி அடிகளால் சிறப்பித்துச் சொல் லப்பட்ட பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாள் ஆகும்.

இந்த நல்ல நாளில் அவருடைய சிறந்த கொள்கைகளையும், அவருடைய உயர்ந்த குறிக்கோள்களையும் நினைவு கூர்வது இன்றியமையாத சிறப்புடையதாகும். இந்தியா விடுதலை பெறுவதற்கு அவர் அரும் பெரும் பாடு பட்டிருக்கிறார். அவ ருடைய அறிவுத் திறனையும், ஆற்றலையும் எந்தெந்த வகை யிலே பயன்படுத்தி வந்தார்கள் என்பதையும் இந்த நல்ல நாளில் நினைவு கூர்வது மிக மிகப் பொருத்தமாகும்.

அவர் குழந்தைகளிடத்திலே அளவு கடந்த பற்றும் பாசமும் கொண்டு, குழந்தைகளிடத்திலே நெருங்கிப் பழகி வந்தார் என்பது மட்டுமல்ல, குழந்தைகளிடத்திலே மிகுந்த நம்பிக்கை வைத்து, அவர்களுடைய எதிர்காலம் மிகச் சிறப்பாக அமைய வேண்டுமென்பதிலே நீங்காப் பற்றும், ஆர்வமும் கொண்டிருந் தார். குழந்தைகளுடைய அறிவியல், அறிவுத் திறன் வளர வேண்டுமென்றும் அவர்களுடைய தொழில் நுட்ப ஆற்றல் திறன் எல்லா வகையிலும் வளர்ந்தோங்கியிருக்க வேண்டுமென்றும் விரும்பினார். ஆகவே எங்கு பார்த்தாலும் சிறந்த முறையில் புதிய இந்தியாவை உருவாக்க வேண்டுமென்பதிலேயும் நல்ல பல கனவுகளையெல்லாம் கண்டு, புதிய இந்தியாவிற்கு அடி கோலியவர் பண்டித ஜவஹர்லால் நேரு ஆவார். இந்தியா வையே சமதர்ம ஜனநாயகக் குடியரசாக ஆக்குவதற்குப் பெரும் பாடுபட்டு அதனை அடிப்படையாக அமைத்து, அதனை நிலை நாட்டிய பெருமையும் பண்டித ஜவஹர்லால் நேருவிற்கு உண்டு.

1986 நவம்பர் 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அப்படி அமைக்கப்பட்ட குடியரசை நடத்திச் செல்வது என்பது எளிதான ஒரு செயல் தான். ஆனால் வெள்ளைக்காரர்கள் காலத்தில் அடிமைப்பட்டிருந்த இந்தியாவை ஒரு குடியரசு நாடாக ஆக்குவதிலும், அதை ஆக்குவதற்கு ஆன அடிப்படை முயற்சிகளை முதலிலே மேற் கொள்வதிலும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு முனைப்பு உள்ளத்தோடு முன்னோடித் திட்டங்களை எல்லாம் எடுத்துக் கொள்வதிலும் அதிக சிரமங்கள் இருக்க முடியும். அந்த நிலையில் இந்திய மக்கள் அத்தனை பேருடைய அரவணைப்பையும், அன்பையும் பெற்று, சிறந்த முறையில் இந்தியாவிற்கு மிகக்குறுகிய காலத்திலே உலகப் புகழை வாங்கித் தந்த பெருமையும் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு உண்டு.

கூட்டு சேரா நாட்டுக் கொள்கையை உருவாக்கி இந்த அளவிற்குக் காப்பாற்றி, அதனால் நல்ல பல பலன்களை உருவாக்கியவரும் பண்டித ஜவஹர்லால் நேருவே ஆவார். ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கி, அதற்கு வித்திட்டு, அதன் மூலம் இந்தியா பல வகைகளிலேயும் வளர வேண்டும், பல நிலைகளிலும் வளர வேண்டும், பல துறைகளிலும் செழிக்க வேண்டும் என்பதற்காகத் திட்டங்களையெல்லாம் தீட்டி, அந்த அடிப்படையிலே படிப்படியாக வளர்வதற்கு வழி கோலியவர் அவரே ஆவார். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஜனநாயகத்திற்கு மிக்க மதிப்பு அளித்தார் என்பதையும், ஜனநாயக கோட்பாடுகளுக்கு மதிப்பு அளித்தார் என்பதையும் மாற்றுக் கருத்துக்களுக்கும், மாற்றார்களுக்கும் மிகச் சிறந்த மதிப்பு அளித்தும், கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பு அளித்தும், மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய மதிப்பையும் அளித்தார் என்பதையும் நாம் மிக நன்றாக அறிவோம். அப்படிச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கிய ஜவஹர்லால் நேருவினுடைய 97-வது பிறந்த நாளில் நாம் அனைவரும் அஞ்சலி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அவருடைய நினைவு என்றென்றும் தங்க வேண்டுமென்பதற்காகத்தான், பரங்கிமலைத் தொகுதியில் அவருடைய பெரிய உருவச் சிலையை நிலை நாட்ட வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் முயன்று, பெரும் சிலைக்கு ஏற்பாடு செய்து, அந்தச் சிலையும் நிலைநாட்டத் தக்க அளவிற்கு ஆயத்த நிலையிலிருக்கிறது. இந்த ஆண்டு இந்தப் பிறந்த நாள் விழாவில் பண்டித நேருவினுடைய திருவுருவச் சிலையை நம்முடைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் திறந்து வைக்கவேண்டுமென்று, சென்ற திங்களிலே திரு. ராஜீவ் காந்தி அவர்களை நேரிலே கண்டபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவருக்கு வேண்டுகோள் விடுத்த

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 நவம்பர் 14

தற்கு முடிந்தால் அங்குவ ருகிறேன்என்று சொன்னார்கள்; இல்லாவிட்டால் சில பல நாட்கள் கழித்து கட்டாயம் வருகிறேன் என்று திரு. ராஜீவ் காந்தி அவர்களும் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். விரைவிலே அவர்கள் வருவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அவர்கள் வந்து பண்டித ஜவஹர்லால் நேருவினுடைய திருவுருவச் சிலையை திறந்து வைக்க வேண்டுமென்பது தான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பெரும் விருப்பமும் ஆகும். அந்தச் சிறப்புக்கு உரிய நிகழ்ச்சி இன்றே நடந்திருக்குமேயானால், மிக மிக பொருத்தமாக இருந்திருக்கும் என்று தான் முதல்வர் அவர்களும் விரும்பினார்கள். என்றாலும் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக அந்தச் சிறப்புக்குரிய நிகழ்ச்சி நடைபெறுவது நமக்கெல்லாம் பெருமிதத்தை அளிக்கின்ற ஒன்றாக அமையும் என்று சொல்லி, இந்த அவையின் சார்பாக, இந்த அவையில் இருக்கின்ற அத்தனைக் கட்சிகளின் தலைவர்கள் சார்பாக, அத்தனைக் கட்சி உறுப்பினர்கள் சார்பாக, பொதுவாக தமிழக மக்களின் சார்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சார்பாக, பண்டித ஜவஹ்ர்லால் நேருவுக்கு அஞ்சலி செலுத்துவதோடு, அவருடைய புகழும், பெருமையும் என்றென்றும் நிலையாக நின்று நமக்கு வழிகாட்டியாக அமைய வேண்டுமென கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களோடும், உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களோடும் என்னுடைய அஞ்சலியையும் அவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

** ** *

3. உரிமைப் பிரச்சினை

மின் வாரியத் தலைவர் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. சிந்தன் அவர்கள் தமிழ்நாடு மின் வாரியம் தனது ஊழியர்களுக்கு அனுப்பிய ஒரு சுற்றறிக்கையில், மின் வாரிய ஊழியர்கள் அவர்கள் குறைகள் குறித்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் பாராளுமன்றத்திலோ அல்லது பேரவையிலோ வினாக்கள் மூலமாகவோ அல்லது விவாதம் மூலமாகவோ தங்க

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.